
# வன்னி

## வரலாறும் பண்பாடும்




பதிப்பாசிரியர்

**க. சுந்தரலிங்கம்**

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | வன்னி - வரலாறும் பண்பாடும் |
| பதிப்புரிமை© - பதிப்பாசிரியர் | : | க. சுந்தரலிங்கம் |
| முதற்பதிப்பு | : | 2014 ஜுலை |
| பக்கங்கள் | : | xx + 655 |
| மின்னஞ்சல் | : | contact@vanninet.info |
| நூல் கிடைக்குமிடம் | : | குமரன் பப்ளிஷர்ஸ்<br>நெ. 3, மெய்கை விநாயகர் தெரு,<br>வடபழநி, சென்னை - 600 026. |

"இந்நூலில் உள்ளடக்கப்பட்டுள்ள ஆக்கங்களுக்கும் கருத்துக்களுக்கும் அவற்றை எழுதிய படைப்பாளிகளே முழுப் பொறுப்பாகும்."

-பதிப்பாசிரியர்

| | | |
|---|---|---|
| TITLE OF THE BOOK | : | Vanni - History & Culture |
| PUBLISHER & COPYRIGHT © | : | K. Suntharalingam |
| ISBN | : | 978-82-303-2572-8 |
| FIRST EDITION | : | 2014 July |
| PAGES | : | xx + 655 |
| E - MAIL | : | contact@vanninet.info |
| COPIES AVAILABLE AT | : | KUMARAN PUBLISHERS<br>No. 3, Meigai Vinayagar Street,<br>Vadapalani, Chennai - 600 026. |

# பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள் எதிர்நோக்கும் சமூக, பொருளாதார பிரச்சினைகள்

### முல்லைத்தீவு மாவட்டத்தில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட பிரதேசங்களை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு




திருமதி சுபாஜினி உதயராசா

சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்


## ஆய்வுப்பின்னணி

இலங்கையின் ஐந்து நிர்வாக மாவட்டங்களை உள்ளடக்கிய வடமாகாணத்தில் அமைந்துள்ள முல்லைத்தீவு மாவட்டம் 1979 இல் புதிய மாவட்டமாக பிரகடனப்படுத்தப் பட்டது. இதன் மொத்தப் பரப்பளவு அண்ணளவாக 25,169 சதுர கிலோமீற்றராகும். பின்தங்கிய மாவட்டமாகவும், வறண்ட வலய மாவட்டமாகவும் இது காணப்படுகின்றது. இதன் எல்லைகளாக வடக்கே கிளிநொச்சி மாவட்டமும், கிழக்கே வங்களா விரிகுடா வும், தெற்கே வவுனியா, திருகோணமலை மாவட்டங்களும் மேற்கே மன்னார் மாவட்ட மும் காணப்படுகின்றது. கடந்த முப்பது வருடங்களாக நாட்டில் ஏற்பட்ட யுத்தத்தி னால் மிகவும் பாதிக்கப்பட்ட மாவட்டமாகவும் இது காணப்படுகின்றது. இங்குள்ள மக்கள் பல்வேறு காலப்பகுதிகளில் இடப்பெயர்வுகளை சந்தித்துள்ளனர். இதனால் உயிரிழப்புக்களையும், உடமை இழப்புக்களையும் அனுபவித்துள்ளனர். 2009ஆம் ஆண்டு விடுதலைப்புலிகளுக்கும், இலங்கை அரசிற்கும் இடையில் இறுதியாக நடைபெற்ற யுத்தத்தில் முழுமையாக பாதிக்கப்பட்ட மாவட்டமாக முல்லைத்தீவினைக் குறிப்பிடலாம். இங்குள்ள மக்கள் முழுமையாக இக்காலப்பகுதியில் இடம்பெயர்ந்து 2010ஆம் ஆண்டு மீளவும் குறிப்பிட்ட சில பிரதேசங்களில் மீள் குடியமர்த்தப்பட்டனர்.




மீள்குடியேற்றம் செய்யப்பட்ட குடும்பங்களில் பல பெண் தலைமை தாங்கும் குடும்பங்களாக உள்ளன. பெண் குடும்பத்தில் தலைமை தாங்குவ தற்கு பல காரணங்கள் இருப்பினும் இக்கட்டுரை யில் கணவன் இறப்பின் விளைவாக உருவாகிய குடும்பங்களும், மனமொருமித்து குடும்பமாக வாழ முடியாது சட்ட ரீதியாக விவாகரத்துப் பெற்ற குடும்பங்களும் மட்டுமே உள்ளடக்கப்பட்டுள்ளன. இவர்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட இடங்களில் பல்வேறு சமூக, பொருளாதார, உளவியல் ரீதி யான பிரச்சினைகளை அனுபவித்து வருகின்றனர். இதனை ஆய்வு செய்வதனூடாக அதற்கான பொருத்தமான தீர்வுகளை முன்வைப்பதாகவே இக்கட்டுரை அமைகின்றது.

## ஆய்வின் நோக்கம் - Objectives

இவ் ஆய்வின் நோக்கங்களாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1) பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள் உருவாகுவதற்கான காரணங்களைக் கண்டறிதல்.

2) பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள் சமூக, பொருளாதார, உளவியல் ரீதியில் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனரா என்பதனைக் கண்டறிதல்.

3) பெண் தலைமை தாங்கும் குடும்பங்களின் பிரச்சினைகளை இனங்கண்டு பொருத்தமான நுட்பமுறைகள் மூலம் தரவுகளை பகுப்பாய்வு செய்து பொருத்தமானதும், உகந்ததுமான தீர்வுகளை முன்வைத்தல்.

## ஆய்வின் வடிவமும் முறையியலும் - Research design and methods


ஆய்வுப்பிரதேசத்தில் உள்ள ஐந்து பிரதேச செயலர் பிரிவுகளில் 616 கிராமங்களில் மக்கள் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளனர். இங்கு 30,359 குடும்பங்களில் 3,775 குடும்பங்கள் பெண் தலைமை தாங்கும் குடும்பங்களாக உள்ளன. இவர்களில் 375 குடும்பங்கள் எல்லாக் கிராமங்களையும் உள்ளடக்கும் வகையில் எழுமாற்றாக தெரிவு செய்யப்பட்டு வினாக்கொத்து வழங்கப்பட்டு தரவுகள் சேகரிக்கப்பட்டன. அத்துடன் நேரடி அவதானம், பேட்டி காணல், கலந்துரையாடல் போன்ற முறைகள் மூலம் தரவுகள் சேகரிக்கப்பட்டன. இரண்டாம் நிலைத்தரவுகளாக ஆய்வுப் பிரதேசம் தொடர்பான நூல்கள் எதுவும் வெளிவராத காரணத்தினால் பிரதேச செயலக புள்ளிவிபரக் கையேடுகள், கிராம சேவையாளர் அறிக்கைகள், பத்திரிகைகள் போன்றவற்றிலிருந்தும் தரவுகள் பெறப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளன. சேகரிக்கப்பட்ட தரவுகள் கணினி மூலம் குறிப்பாக Excel Package மூலமும், புவியியல் அளவைசார் நுட்பமுறை மூலமும் (Quantitative Techniques in Geography) எளிய புள்ளிவிபர முறை மூலமும் பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

### பெண் தலைமை தாங்கும் குடும்பங்கள் உருவாகுவதற்கான காரணங்கள்

அட்டவணை: 01

| காரணங்கள் | குடும்பங்களின் எண்ணிக்கை |
|---|---|
| வன்செயல் | 259 |
| இயற்கை மரணம் | 59 |
| பிரிந்து வாழல் | 28 |
| விபத்து | 14 |
| வேறு திருமணம் | 08 |
| நலிவடைந்திருத்தல் | 07 |
| விவாகரத்து | 02 |
| மொத்தம் | 375 |

விளக்கப்படம்: 01




மூலம்: கள ஆய்வு, 2012


ஆய்வின் மூலம் அதிகளவான பெண் தலைமை தாங்கும் குடும்பங்கள் உருவாகுவதற்கு வன்செயலே காரணம் என கண்டறியப்பட்டுள்ளது. குறிப்பாக 2009ஆம் ஆண்டு நடைபெற்ற இறுதிக்கட்ட யுத்தத்திலே அதிகளவான ஆண்கள் இறந்துள்ளனர். அதாவது 69 வீதமான பெண்களின் கணவன்மார்கள் வன்செயலால் இறந்துள்ளனர். இதனை அட்டவணை 1 உம் விளக்கப்படம் ஒன்றும் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது.

**ஆய்வுக்கு உட்பட்ட பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களின் குடும்பப் பருமன்**

அட்டவணை: 02

| பிள்ளைகளின் எண்ணிக்கை | குடும்பங்களின் எண்ணிக்கை |
|---|---|
| 1 | 297 |
| 2 | 42 |
| 3 | 21 |
| 4 | 13 |
| 5 | 02 |

விளக்கப்படம்: 02




மூலம்: கள ஆய்வு, 2012

அட்டவணை இரண்டினை அவதானிக்கும் போது அதிகளவான குடும்பங்களில் ஒரு பிள்ளையே காணப்படுகின்றது. 2007, 2008 காலப்பகுதியில், ஏற்பட்ட சில அச்சுறுத்தல்கள் காரணமாக அவசரமாக ஆண்களும், பெண்களும் திருமணம் செய்து கொண்டனர். 2009ல் ஏற்பட்ட யுத்தத்தில் அதிகளவான இறப்புக்களை தழுவியவர்களில் மேற்குறிப்பிட்ட குடும்பங்களைச் சேர்ந்த ஆண்கள் இடம்பெற்றுள்ளனர். இதனை விளக்கப்படம் இரண்டிலும் அவதானிக்கலாம்.

**பெண் தலைமைத்துவ குடும்பங்களின் விவாக வயது**

அட்டவணை: 03

| வயது | குடும்பங்களின் எண்ணிக்கை |
|---|---|
| 15 - 19 | 242 |
| 20 - 24 | 76 |
| 25 - 29 | 43 |
| 30 - 34 | 14 |

விளக்கப்படம்: 03





விவாக வயதினை நோக்கும் போது 15 - 19 வயதிற்கு இடைப்பட்டவர்களே அதிகமாக உள்ளனர். இதற்கு அக்காலத்தில் நிலவிய பதற்றமான சூழ்நிலையால் பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு திருமண வயதை எட்ட முன்னமே திருமணம் செய்து வைத்திருந்தனர். இதுவே இவ்எண்ணிக்கை அதிகமாக இருப்பதற்கு காரணமாகும். இதனையே விளக்கப்படம் மூன்று காட்டுகின்றது.

### கணவருடன் சேர்ந்து வாழ்ந்த காலப்பகுதி

அட்டவணை: 04

| வருடங்கள் | குடும்பங்களின் எண்ணிக்கை |
|---|---|
| 01 - 05 | 219 |
| 06 - 10 | 63 |
| 11 - 15 | 34 |
| 16 - 20 | 31 |
| 20 < | 28 |

விளக்கப்படம்: 04




மூலம்: கள ஆய்வு, 2012


திருமண வயது குறைவாக இருக்கின்ற அதேவேளை கணவருடன் சேர்ந்து வாழ்ந்த காலப்பகுதியும் குறைவாகவே உள்ளது. இக் குடும்பங்களில் 219 குடும்பங்கள் ஒன்று தொடக்கம் ஐந்து வரையான ஆண்டுகள் வரையே கணவருடன் சேர்ந்து வாழ்ந்த காலப்பகுதியாக உள்ளது. இதனை விளக்கப்படம் நான்கும் காட்டுகின்றது.

### பெண் தலைமை தாங்கும் குடும்பங்களின் தற்போதைய வயது

அட்டவணை: 05

| வயது | குடும்பங்களின் எண்ணிக்கை |
|---|---|
| 16 - 20 | 92 |
| 21 - 24 | 123 |
| 25 - 29 | 103 |
| 30 - 34 | 24 |
| 34 - 39 | 16 |
| 40 - 44 | 06 |
| 45 - 49 | 04 |
| 50 - 54 | 03 |
| 55 - 59 | 02 |

விளக்கப்படம்: 05





மூலம்: கள ஆய்வு, 2012

அட்டவணை 5 இன்படி பெண்களின் தற்போதைய வயதில் 21 வயது - 29 வயதிற்கு உட்பட்டவர்களில் 226 குடும்பங்கள் காணப்படுகின்றன. திருமணம் செய்ய வேண்டிய வயதில் விதவைகளாக இவர்கள் இருப்பது இங்கு சுட்டிக்காட்டக்கூடிய விடயமாகும். இதனையே விளக்கப்படம் ஐந்து காட்டுகின்றது.

### ஆய்விற்கு உட்பட்ட குடும்பங்களின் கல்வி நிலை

அட்டவணை: 06 விளக்கப்படம்: 06

| கல்வி நிலை | குடும்பங்களின் எண்ணிக்கை |
|---|---|
| 01 - 05 ஆம் தரம் | 83 |
| 06 - 11 ஆம் தரம் | 179 |
| க.பொ.த. உயர் தரம் | 91 |
| பட்டப் படிப்பு | 22 |




மூலம்: கள ஆய்வு, 2012


அட்டவணை ஆறின்படி இக்குடும்ப பெண்களின் கல்வி நிலையும் மிகத் தாழ்ந்த மட்டத்திலேயே குறிப்பாக பதினோராந் தரம் வரை கல்வி கற்றவர்கள் 179 பேராக உள்ளனர். நாட்டின் அசாதாரண சூழ்நிலையால் கல்வி நிலையும் பாதிக்கப்பட்டுள்ளதோடு போரின் பாதிப்பிற்கு உட்பட்ட பெண்களின் கல்வி நிலையும் குறைவாகவே உள்ளது. இதனை விளக்கப்படம் ஆறு தெளிவாக காட்டுகின்றது.

### ஆய்விற்கு உட்பட்ட பெண்களின் தொழில் நிலைமை

அட்டவணை: 07 விளக்கப்படம்: 07

| தொழில்கள் | குடும்பங்களின் எண்ணிக்கை |
|---|---|
| வீட்டுப் பணி | 172 |
| சுயதொழில்கள் | 77 |
| அரச பணி | 53 |
| தையல் வேலை | 57 |
| சுகாதாரத் தொண்டர் | 16 |

மூலம்: கள ஆய்வு, 2012




தொழில் என்ற அடிப்படையில் சுயதொழில் செய்பவர்களே அதிகமாக உள்ளனர். இவர்கள் போதியளவு கல்வியறிவு இல்லாதவர்களாக இருப்பதனால் தரமான சிறந்த வேலைவாய்ப்பினை பெறமுடியாதுள்ளனர். ஆய்விற்கு உட்படுத்திய குடும்பங்களில் 172 பெண்கள் வீட்டுப் பணி செய்பவர்களாகவே உள்ளனர். இதன் காரணமாக அவர்களுடைய குடும்பத்தினை பராமரிப்பதற்கான வருமானமும் மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. இதனை அட்டவணை எட்டில் அவதானிக்க முடிகின்றது. ஆய்விற்கு உட்பட்ட பெண்களின் தொழில் நிலைமையை விளக்கப்படம் ஏழும், வருமானத்தை விளக்கப்படம் எட்டும் எடுத்துக் காட்டுகின்றன.


## ஆய்விற்கு உட்பட்ட குடும்பங்களின் வருமானம்

அட்டவணை: 08

| மாத வருமானம் (ரூபாவில்) | குடும்பங்களின் எண்ணிக்கை |
|---|---|
| 1000 - 3000 | 139 |
| 3001 - 6000 | 126 |
| 6001 - 9000 | 81 |
| 9000 க்குமேல் | 29 |

மூலம்: கள ஆய்வு," 2012

விளக்கப்படம்: 08





## ஆய்வுக்கு உட்பட்ட குடும்பங்களின் வீட்டின் உரிமை

அட்டவணை: 09

| வீட்டின் உரிமை | குடும்பங்களின் எண்ணிக்கை |
|---|---|
| சொந்தமானது | 170 |
| வீடமைப்புத் திட்ட வீடு | 176 |
| உறவினர் வீடு | 29 |

விளக்கப்படம்: 09




மூலம்: கள ஆய்வு, 2012

ஆய்விற்கு உட்படுத்திய குடும்பங்களின் வீட்டு உரிமையை நோக்கின் போரின் பின்னர் வீடமைப்புத் திட்டத்தின் மூலம் அமைத்துக் கொடுக்கப்பட்ட வீட்டில் வசிப்பவர்களே அதிகமாக உள்ளனர். காரணம் போரின் போது, அதிகளவான மக்களின் வீடுகள் முழுமையாக அழிவடைந்து விட்டன. குறிப்பிட்டுக் கூறக்கூடிய அளவு மக்கள் சொந்த வீட்டிலும் மிகக் குறைவான அளவினர் உறவினர் வீடுகளிலும் இன்றுவரை வசித்து வருகின்றனர். இதனை விளக்கப்படம் ஒன்பது காட்டுகின்றது.

## ஆய்வின் முடிவுகளும், பரிந்துரைகளும் / தீர்வுகளும் Finding and Conclusions

இவ் ஆய்விற்கு பெறப்பட்ட தரவுகளின் பகுப்பாய்வுகள் மூலம் பெற்றுக் கொண்ட முடிவுகளின் படி பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களின் சமூக பிரச்சினைகளாக சமூக அந்தஸ்து குறைவு, கல்வி அறிவு குறைவு, வீட்டு வசதிகள் சீராக இல்லாமை, மலசலகூட வசதிகள் இல்லாமை இதனால் சுகாதாரச் சீர்கேடுகள், தொற்று நோய்களின் அபாயம் போன்றன காணப்படுவதோடு பாதுகாப்பின்மையும் முக்கியமாக உள்ளது. பொருளாதார பிரச்சினைகளாக வேலையின்மை, வருமானமின்மை, வறுமை, இதனால் பிள்ளைகள் சிறந்த கல்வியினை பெறமுடியாத நிலை, போசாக்கான உணவின்மை போன்றன அடையாளம் காணப்பட்டுள்ளன. இதனை விட உளவியல் ரீதியான பிரச சினைகளும் அடையாளம் காணப்பட்டுள்ளன.

இவற்றிற்கான தீர்வுகளாக முதலில் குடும்பங்களை தலைமை தாங்கும் பெண்களுக் குரிய சமூக அந்தஸ்தினை வழங்க வேண்டும். ஏனைய பெண்களைப் போல அவர்களையும் சமூகத்தில் மதித்து நடக்க வேண்டும். இளவயது விதவைகள் மறுமணம் செய்வதை அங்கீகரித்தல் வேண்டும். (இப்பெண்களின் சமூக அந்தஸ்து உயரும் போது சமூகப் பாதுகாப்பு தானாகவே ஏற்பட்டு விடும்) அரசும், அரச சார்பற்ற நிறுவனங்களும் இவர்களுக்கு வேண்டிய வீட்டு வசதிகளையும், கிணறு, மலசலகூட வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். இவர்களின் பிள்ளைகள் கல்வியை சிறந்த முறையில் பெறுவதற்கு பொருத்தமான வழிமுறைகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

பொருளாதார பிரச்சினைகளுக்குரிய தீர்வுகளாக இவர்களின் கல்வித்தகைமைக்கு ஏற்ப வேலை வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். பணத்தையோ பொருட் களையோ தொடர்ந்து வழங்கிக் கொண்டிருக்காமல் பணத்தை நிரந்தரமாக அவர்கள் பெறுவதற்கான ஒரு வழியை ஏற்படுத்திக் கொடுத்தால் தொடர்ந்து அவர்கள் முன்னேறிச் செல்வார்கள். கல்வியறிவுடையவர்களுக்கு அவர்களின் தகைமைகளுக்கு ஏற்ப வேலை வாய்ப்புக்களையும், ஏனையோருக்கு சுயதொழில் முயற்சிகளையும் (கோழிவளர்த்தல், ஆடைகள் தைத்தல், பப்படம் தயாரித்தல், பன்ன வேலைகள், கயிறு திரித்தல் போன்ற இன்னும் பல) ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் அவர்கள் தொடர்ந்து வருமானத்தை பெறமுடியும்.

அத்துடன் தலைமை தாங்கும் பெண்களிடம் மறைந்திருக்கக் கூடிய ஆளுமை, தன்னம்பிக்கை, துணிவு, மனவுறுதி என்பவற்றை வெளிக்கொணரும் வகையில் பயிற்சிப்பட்டறைகள், கருத்தரங்குகள் போன்றவற்றினை நடாத்தி வலுவுள்ளவர்களாக்க வேண்டிய பொறுப்பு அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு உரியது. இதற்காக பெண்களுக்கு தலைமைத்துவப் பயிற்சிகளை வழங்குவதோடு அவர்களின் திறன் வெளிக்கொணரப்படுவதுடன் உளப்பாதிப்புக்களையும் குறைக்க முடியும். இதன் மூலம் புதிய தொழில் முயற்சிகளைக் கூட உருவாக்கும் ஆளுமைப் பண்பு தானாகவே ஏற்பட்டுவிடும்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிகழ்ந்த யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களில் இவர்களே பிரதானமானவர்களாக உள்ளனர். எனவே அரசாங்கம் இவர்கள் நலன் தொடர்பான அமைச்சு அல்லது திணைக்களத்தினை உருவாக்கி இப்பெண்களையும் இவர்கள்தம் குடும்பத்தினரையும் வலுவுள்ளவர்களாக்க வேண்டும். கல்வித்தகைமை அடிப்படையில் இத்தகைய குடும்பங்களில் உள்ள அங்கத்தவர் ஒருவருக்கு அரச நிறுவனங்களில் தொழில் வாய்ப்பினை வழங்குவதனை உறுதிப்படுத்துதல் வேண்டும். அத்துடன் இவர்களது பிள்ளைகளின் கல்விச் செயற்பாட்டிற்கான செலவீனத்தின் ஒருபகுதியை ஈடுசெய்தல், கல்வி மற்றும் தொழில் ஆற்றலைக் கருத்திற் கொண்டு வருமானத்தைப் பெறக்கூடிய வகையிலான நுண் திட்டங்களை இனங்கண்டு செயற் படுத்துதல் நிதி மூலாதாரங்களை இனங்காணல் போன்றவற்றினை மேற்குறித்த திணைக்களத்தின் மூலம் செயற்படுத்தலாம். இவற்றிற்கும் மேலாக பெண்களை வலுவூட் டல் தொடர்பாக அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் ஒன்றிணைந்து தூர நோக்குடன் கூடியதான செயற்திட்டங்களை முன்னெடுத்துச் செல்லல் அவசியமானது.

## முடிவுரை

ஆய்வுப் பிரதேசத்தில் பெண் தலைமை தாங்கும் குடும்பங்களில் பெரும்பாலானோர் இளவயதினராக இனங்காணப்பட்டுள்ளனர். இக்குடும்பங்களில் வாழ்வாதாரத் திட்டங்கள் வழங்கப்பட்ட போதிலும் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, தொழிலின்மை, மூலதனமின்மை காரணமாக பொருளாதார நிலை பின்நோக்கியதாகவே காணப்படுகின்றது. குறிப்பாக இக்குடும்பப் பெண்களை வலுவூட்டல் தொடர்பான அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் ஒன்றிணைந்து தூர நோக்குடன் கூடியதான செயற்றிட்டங்களையும், விழிப்புணர்வுத் திட்டங்களையும் முன்னெடுத்துச் செல்லல் அவசியமானதும், காலத்தின் தேவையாகவும் உள்ளது.

## உசாத்துணை நூல்கள் - References


குகபாலன்.க. (2008), "யாழ்ப்பாண மாவட்டத்தில் பெண் தலைமை தாங்கும் குடும்பங்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகள்" திட்டமிடல் இதழ் I, புவியியற்கழகம் புவியியற்றுறை, யாழ். பல்கலைக்கழகம்.

ஜெனிற்றா தனலட்சுமி கறுப்பையா, (2003), "போரும் பெண்களும்" நிவேதினி பால்நிலைக் கற்கைநெறிச் சஞ்சிகை,48-B, புளூமென்டல் வீதி, கொழும்பு பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம்.

சத்தியசீலன்.வ., (2000), "வலி. வடக்கில் மீளக்குடியமர்வும் பெண்கள் தலைமைத்துவமும்" வலி. வடக்கு தெல்லிப்பளை பிரதேச செயலகம்.

Kugabalan.K. (1999), Divorce Pattern in the Jaffna District, South Asia, Ed. Dr.A.V.Manivasagar, Jaffna. University of Jaffna.

குயின் ஜெயமேரி, பி. (1997), "விதவைகள் பிரச்சினைகள்" ஒரு சமூகவியல் நோக்கு, மானுடம் - 01, சமூகவியல் சமூகம், யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.

மனோன்மணி,ச., (1984) தமிழர் திருமண நடைமுறைகள், யாழ்ப்பாணம், முத்தமிழ் வெளியீட்டுக்கழகம்.

Mullaitivu Secretariat Statistical Information Mullaitivu., 2010, 2011,

ஆய்வுப் பிரதேச கிராமசேவையாளர் அறிக்கைகள் 2010, 2011.


◆